மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Correspondents of aided high schools

* 139 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether Correspondents of Aided High Schools have authority to interfere in the acadmic work and the internal administration of schools; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) இயல்பாகத் தலையிடுவதில்லை. ஆனால், முறைகேடான செயல்கள் நிகழ்ந்து வருவதாகக் கவனிக்கப்படும்பொழுதும், பள்ளியின் வேலை புறக்கணிக்கப்படும்பொழுதும், பள்ளி ஒழுங்காகப் பேணிவரப் படுவதற்கும், பள்ளி ஏற்பு மானியம் நிபந்தனைகள் நிறைவேற்றப் படுவதற்கும், அவ்வப்போது முடிவு செய்யப்படுகிற ஒழுங்கு விதிகள் செயல்படுத்தப்படுவதற்கும் பொறுப்புள்ள பள்ளித் தொடர்பாளர் அவ்வாறு தலையிட்டுக் குறைகளை நீக்கலாம்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில் நடந்து, அரசு தலையிட்டு, அந்த நிர்வாகஸ்தர்களை அப்பதவிப் பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு ஏற்பாடு செய்ததுண்டா? ஏதேனும் அப்படி நிகழ்ச்சிகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தகவல் இல்லை.

Book published during World Tamil Conference

* 140 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the books and reports published by the Director of Tamil Development in his capacity as the Secretary-General of the World Tamil Conference at the cost of the conference;

(*b*) the price at which each of them was sold;

(*c*) the number of copies published in each; and

(*d*) the names of the persons to whom these were distributed free of cost?

உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உலகத் தமிழ் மாநாட்டுச் செலவில் தமிழ் வளர்ச்சி இயக்குநரால் மாநாட்டு அமைப்புச் செயலாளர் என்னும் முறையில் என்னென்ன புத்தகங்கள், அறிக்கைகள் வெளியிடப் பட்டன?

6th March 1969]

(இ) அவைகள் ஒவ்வொன்றும் என்ன விலைக்கு விற்கப் பட்டது?

(உ) ஒவ்வொன்றிலும் எத்தனை பிரதிகள் அச்சிடப்பட்டன?

(எ) யார் யாருக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர், புகாரில் ஒரு நாள்; கலைக் காட்சிக் கையேடு ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பெற்றன.

(இ) இவை முறையே ரூ. 30, ரூ. 1, ரூ. 15 ஆகிய விலைக்கு விற்கப்பட்டன.

(உ) இவற்றில் முறையே 10,000, 5,000, 5000 பிரிதிகள் அச்சிடப்பட்டன.

(எ) அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், கட்டுரை ஆசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், மாநாட்டு வெற்றிக்காக உழைத்தோர் முதலியவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இதில் எத்தனை ரொக்கத்திற்கு விற்கப்பட்டது? எத்தனை இலவசமாகக் கொடுக்கப்பட்டது? எத்தனை இப்போது ஸ்டாக் இருக்கிறது? இருந்தால் அங்கத்தினர்களுக்கு ஏதாவது கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : யார் யாருக்குக் கொடுக்கப் பட்டது என்ற புள்ளி விவரம்தான் இருக்கிறது. எத்தனை கொடுக்கப்பட்டது என்ற கணக்கு இல்லை. அங்கத்தினர்களுக்குக் கொடுக்கலாம் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. புத்தகங்கள் இருக்கின்றனவா என்று கேட்டிருக்கிறேன்.

U.N. contribution for World Tamil Conference

*141 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the U.N. Assembly donated Rs. 50,000 for the World Tamil Conference; and

(*b*) the condition subject to which this donation was given?

உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஐ. நா. நன்கொடை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஐ. நா. சபை உலகத் தமிழ் மாநாட்டுக்காக ரூ. 50 ஆயிரம் நன்கொடையாகக் கொடுத்ததா ?

(இ) என்ன நிபந்தனையுடன் இந்த நன்கொடை கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நடவடிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதற்காக யுனெஸ்கோ 48,750 ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளது,